ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

20.02.2025

1. ஞானவான்களாக வந்தவர் கோடி
ஞானிகளாக வென்றவர் கோடி
தானதருமமே உண்மை வழியென
தரணியில் உணராதவர் கோடிகோடி

2. கோடிக்கு மேலான தருமவான்கள்
குவலயம் அடைய வேண்டுமெனக் கருதி
தேடிதேடி அரங்கன் யானும்
தொண்டர் பெருமக்களை கூட்டி இனிதே

3. இனிதே தரும ஞானசபையை
ஏழாம் படை வீடாக நிறுவியுள்ளேன்
கனிவுடன் இந்த வாழ்வை கடத்தி
கடைத்தேறவே மக்களை அழைக்கிறேன்

4. அழைக்கவே பிரணவக்குடிலுக்கு வர
அனைவரும் தருமவான்களாகி
பிழையற ஞானிகளாவர் எனக் கூறி
புகலுவேன் குரோதி சால் திங்கள்

5. திங்களிலே இரண்டாம் குருவார ஆசி
தேசிகனும் அருளாசியாகத் தருவேன்
ஓங்கார ஞானம் அடைந்திட
ஓங்காரக் குடிலை நோக்கி வந்து

6. வந்துமே சோதிவடிவான என்னை
வணங்கி அரங்கா முருகா என
சிந்தையுள் ஏற்றி செபதபம் செய்து
சித்தம் தெளிவிக்கும் அருளமுது உண்டு

7. உண்டுமே தேக மனபலம் கண்டு
உயர்வாக என் சீடன் ராம்குமார் வழி
தொண்டர்களாகிடத் தருகின்ற
தீட்சை வகைதனை ஏற்று

8. ஏற்றுமே சேவிக்க நலம்
எண்ணிய எல்லாம் கைகூட
ஆற்றல்மிக்க அன்னதானத்தில்
அனைவரும் பொருளுதவி செய்து

9. செய்துமே தொடர்ந்து வந்து
சித்திகள் தா என வேண்டி
மெய் ஞான பிரம்ம சூட்சும
மேலான சுத்த சன்மார்க்க

10. சன்மார்க்க சைவ நெறி ஏற்று
சக உயிரெல்லாம் தன்னுயிராய் வணங்கி
நன்மைதனை செய்து வருக
ஞானிகளை இதுவே அடைகின்ற

11. அடைகின்ற உயர் வழியுமாக
அரங்கன் என் அனுகூலம் கிட்ட
தடையற யாவரும் ஞானிகளாவர்
தவராஜன் விளம்பிய குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி